செ.வெ.எண்: 03 நாள்: 02.02.2018

**புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.**

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் தினமும் நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் (01.02.2018) அன்று துவக்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் மிகநீண்ட நாள் கோரிக்கையான புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டப்பட்டு தற்பொழுது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தினமும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளாக ஏராளமான பொதுமக்கள் வருகைதந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுநாள் வரை இம்மருத்துவமனையின் குடிநீர் தேவைகள் ஆழ்துளை கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எனினும் பொதுமக்கள் மற்றும் நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டு இம்மருத்துமனையில் உள்ள அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் பெரும் முயற்சி மேற்கொண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1751 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுகுடிநீர் திட்டத்தின் முள்ளூர் நீர்உந்து நிலையத்திலிருந்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் தினமும் நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பொதுமக்கள் மற்றும் நோயாளிகளின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், 24 மணி நேரமும் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த 15 தினங்களுக்கு முன்னர் அதிநவீன 16 ஸ்லைஸ் சிடி ஸ்கேன் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. விரைவில் அதிநவீன எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியும் ஏற்படுத்தப்படவுள்ளது. விரைவில் செவிலியர் கல்லூரியும் துவங்கப்படவுள்ளது. இம்மருத்துவமனையில் பல்வேறு அதிநவீன உயர் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் நமது மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் சிகிச்சைக்காக பிற மாவட்டங்களுக்கு செல்வது தடுக்கப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் திரு.மாணிக்கம், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாரதா, நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவாசுப்பிரமணியன், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட் (எ) அப்துல்ரஹ்மான், மத்திய தொலைத்தொடர்பு ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.பாஸ்கர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**